அன்றன்றுள்ள அப்பம்

# ஒலிவமரக் கன்றுகள்

ஜுலை – 2023 | மரம் – 2 | கன்று – 7 | ஆண்டு சந்தா ரூ.250 /- | தனிப்பிரதி ரூ.25 /- | ஆயுள் சந்தா ரூ.2500 /-

உன் மகனைச் சிட்சைசெய்,

ஆறுதல்செய்வான்,

உன் ஆத்துமாவுக்கு

ஆனந்தத்தையும்

உண்டாக்குவான்.

நீதிமொழிகள் 29:17



ஆசிரியர். J.ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களில்
# உருவாகும் வரைக்கும்...

(கலாத்தியர் 4:19)

**இயேசு கிறிஸ்துவின் செல்லக் குழந்தைகளே, உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

கோடை கால விடுமுறை நாட்களை பயனுள்ள வகையில் உங்கள் தனித்திறன்களை வளர்த்தெடுக்கும் வாய்ப்புகளை வளமையான முறையில் பயன்படுத்திக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். மனிதத்தைத் தாண்டிய புனிதம் எதுவுமில்லை என்பதால், கிடைக்கும் நேரங்களில் உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து உறவுகளை கட்டியெழுப்பியிருப்பீர்கள் என்றும் நம்புகிறேன். புதிய கல்வியாண்டிற்குள் (மேற்)கல்விக்கூடங்களுக்குள் காலடி எடுத்து வைத்திருக்கும் உங்கள் முயற்சிகளை, உங்கள் தேவைகளை தேவன் நிறைவேற்றுவாராக.

சொற்ப காலம் பூமியில் வாழும் நம்முடைய வாழ்விற்காக திறன் உயர்த்தும் பயிற்சிகளை மேற்கொள்வது போல, கிறிஸ்துவுக்காக எதையாவது சாதிக்க வேண்டும் என்ற சாதனை மனப்போக்கு உங்களில் உருவாகட்டும். காரணம், கிறிஸ்துவை பின்பற்றும் சீடர்கள் அனைவருமே சாதித்த பின்னர் தான் சாகடிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவை போதித்த பின்பு தான் புதைக்கப்பட்டுள்ளனர். நாமும் புதைக்கப்படும் முன் விதைத்துவிடுவோம். அழிக்கப்படும்முன் ஆத்தும அறுவடை செய்வோம். மரணம் வந்துக்கொண்டே இருக்கிறது. கொடுக்கப்பட்ட தருணம் சென்றுக்கொண்டே இருக்கிறது. இப்போதாவது சுதாகரிப்போம். சுயத்துக்கு மரிப்போம். தாழ்மையை தரிப்போம். ஆவியின் கனி கொடுப்போம். உண்மை கிறிஸ்தவனாய் மாறுவோம். சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டி கூறுவோம். ஆத்துமாக்களோடு பரலோகம் செல்வோம். தேசம் பரமனை அறியட்டும்.

ஒவ்வொரு மதத்தினருக்கும் ஒரு அடையாளம் இருக்கின்றது. இந்து சமயத்தார் பொட்டு, சந்தனம், குங்குமம் வைத்திருப்பார்கள். கையில் காப்பு கட்டியிருப்பார்கள். இஸ்லாமிய ஆண்கள் தொப்பி அணிந்து தாடி வளர்த்திருப்பார்கள். இஸ்லாமிய பெண்கள் அநேகர் பர்தா போட்டிருப்பார்கள், குறைந்த பட்சம் முக்காடாவது போட்டிருப்பார்கள். சீக்கிய ஆண்கள் டர்பன் கட்டி, தாடி வளர்த்திருப்பார்கள்.

அப்படியானால், மற்றவர்கள் நம்மை கிறிஸ்தவர்கள் என்று அடையாளம் கண்டு கொள்வதற்கேதுவாக கிறிஸ்தவர்களுக்கு இருக்க வேண்டிய அடையாளமாக அப்பா இயேசு சொல்வது இதுதான்: ''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்'' என்றார் (யோவான் 13:34-35).



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# மருதமரம்

தாவரவியல் பெயர்: Terminalia Arjuna

குடும்பம்: Combretaceae

**மருத மரம்** தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, நேப்பாளம், வங்காளதேசத்தில் அதிகம் காணப்படுகிறது. இந்த மரம் இந்தியாவில் வளரக்கூடிய மரமாகும். உயரிய மூலிகை மருத்துவ குணங்களால், 'திருமருது' என சங்ககாலத்தில் போற்றப்படும் இம்மரம், மனிதர்க்கு உடற்பிணி தீர்க்கும் அருமருந்தாக, சித்த மருத்துவத்தில் பயன் தருகிறது. முன் காலத்தில் கோவில் தேர்கள் செய்ய, மருத மரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். முன் காலத்தில் காடுகளில் மருதமர வளர்ச்சியைக் கொண்டு, நீர் ஊற்று இருப்பதை கண்டறிந்தனர். ஓங்கி வளர்ந்த மருதமரத்தின் அருகே, ஆழத்தில் நீரூற்று இருக்கும் என நம்பப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள கோயமுத்தூர் அருகே, மருதமரங்கள் நிறைந்துள்ள மலையை மருதமலை என அழைக்கின்றனர். வைகை ஆற்றின் கரையோரம் மிக அதிக அளவில் காணப்பட்டதால், மருதத்துரை எனும் பெயரில் அழைக்கப்பட்ட அந்நாள் நகரமே, இன்று மருவி, மதுரை என வழங்கப்படுகிறது. இப்படி பல்வேறு வகைகளில் தமிழர் வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளது மருத மரம்.



ஆற்றங்கரை மற்றும் வயல் ஓரங்களில் ஓங்கி உயரமாக வளரும் தன்மை கொண்டது. செழிப்பான மரமான இம்மரம் 25 முதல் 30 மீட்டர் உயரம் வளரக்கூடியது. மருத மரத்தில் வெண்மருது, கருமருது, கலிமரு, பூமருது, ஆற்று மருது, நீர் மருது, பில்லமருது என பல்வேறு வகைகள் உள்ளன. மருத மரத்தில் வெண்மை, செம்மை என இரு வகையுண்டு. இரண்டின் தன்மைகளும் பண்புகளும் ஒன்றே தான். மருத மரத்தின் இலை, பழம், விதை, பட்டை என அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டவையே.



இந்த மரத்தில் உள்ள மலர்கள் வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இலைகள் நீள்வட்ட வடிவத்தில் பச்சை நிறமாக இருக்கும். ஆனால், இறுதியில் பழுப்பு நிறத்தில் இருக்கும். மேலும் அதன் கிளைகள் மீது ஒன்றிற்கொன்று எதிரெதிராக வளரும்.



இதன் இலைக் கொழுந்தை (தலா மூன்று) மென்று விழுங்கினால், ரத்தபேதி மற்றும் சீதபேதி உடனடியாகக் குணமாகும். இலையை அரைத்துப் பாலில் கலந்து, காலை-மாலை இரு வேளையும் தொடர்ந்து ஐந்து நாட்கள் வரை குடித்து வந்தால், பித்த வெடிப்புகள் நீங்கும். இலை, பூ, காய் ஆகியவற்றைச் சம அளவில் எடுத்துக் கொதிக்க வைத்துக் குடிநீராக்கிக் குடித்தால், ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்கள் மற்றும் வெள்ளை அணுக்களின் அளவு அதிகரிக்கும்.



இதன் பழத்தை எடுத்து நன்றாக அவித்து நன்கு பிசைந்து புண்களின் மீது வைத்துக் கட்டிவர கொடிய புண்களெல்லாம் விரைவாக குணமாகும்.

மருத மரத்தின் வழவழப்பான துவர்ப்பு தன்மைமிக்க மரப்பட்டை மென்மையாகவும் சாம்பல் நிறமாகவும் இருக்கும். ஆனால் இடையிடையே அதில் சில பச்சை மற்றும் சிவப்பு திட்டுகள் காணப்படும். மே முதல் ஜூலை வரை இந்த மரத்தின் வெள்ளை நிற பூக்கள் கொத்து கொத்தாக பூக்கும். மருதப் பழம் புதிதாக இருக்கும் போது பச்சை நிறமாக இருக்கும் மற்றும் முதிர்ச்சியடைந்த பின்பு மர பழுப்பு நிறமாக மாறும்.



மருத மரப்பட்டையில் கோ-என்சைம் கே-10, டான்னிக் அமிலம், ஃபிளாவனாய்டுகளில்

மெக்னீசியம், துத்தநாகம், தாமிரம் மற்றும் கால்சியம் போன்ற கனிமங்கள் அதிகமாக உள்ளன.

உடலின் இரத்த நாளங்களில், உணவு நச்சுக்களால் ஏற்பட்ட கொழுப்புகள் சேர்ந்து, அவற்றால் அடைப்பு ஏற்பட்டு, இதயத்தின் இரத்தம் சுத்திகரிக்கும் தன்மை பாதிப்படைகிறது. இத்தகைய அடைப்பை சரிசெய்யும் ஆற்றல் மருதம் பட்டைக்கு உண்டு.

மருதம்பட்டை, வெண்தாமரைப்பூ போன்றவை 100 கிராம் எடுத்துக்கொண்டு அதனுடன் ஏலம், லவங்கம், திரிகடுகம் 10 கிராம் போன்றவற்றை பொடியாக்கி வைத்துக் கொண்டு, இதில் 6 கிராம் அளவு எடுத்து அது மூழ்குமளவு தண்ணீர் சேர்த்து கசாயமாக்கி காலை, மாலை குடித்து வந்தால் **இதய நோய்** குணமாகும். **இரத்த நாள அடைப்புகள்** நீங்கி, இதயம் வலுவடைந்து, **இரத்த ஓட்டம்** சீராகும், மாரடைப்பு பாதிப்புகள் நீங்கும்.

மருதம் பட்டை, வில்வ இலை, துளசி போன்றவற்றை காய வைத்து பொடியாக்கி ஒரு சிட்டிகை அளவு காலை, மாலை 2 வேளை சாப்பிட்டு வந்தால் **மன உளைச்சல், தூக்கமின்மை, மனச்சோர்வு, படபடப்பு** போன்றவை சரியாகி புத்துணர்ச்சி கிடைக்கும். **மனக் குறைபாடுகளை போக்கி, நல்ல உறக்கத்தையும்** வரவழைக்கிறது.

மருதம் பட்டையில் பாதி அளவு சீரகம், சோம்பு, மஞ்சள் போன்றவற்றை எடுத்துக்கொண்டு பொடியாக்கி வைத்துக்கொள்ளுங்கள். இதில் 6 கிராம் அளவு எடுத்து 400 மில்லி தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து 200 மில்லியாக்கி அதை குடித்து வந்தால் **ரத்த அழுத்தம்** சரியாகும்.

மருதம் பட்டை, ஆவாரம்பட்டை போன்றவற்றை சம அளவு எடுத்து அதில் 10-ல் ஒரு பங்கு ஏலம், சுக்கு சேர்த்து பொடியாக்கி அதில் அரை ஸ்பூன் அளவு எடுத்து நீர் விட்டு காய்ச்சி காலை, மாலை என தொடர்ந்து குடித்து வந்தால் **சர்க்கரை நோய்** குணமாகும்.

மருத மரத்தின் இலைகளை விழுதாக அரைத்து, தினமும் காலை வேளைகளில் ஒரு நெல்லிக்காயளவு சாப்பிட்டுவர பாதங்களில் ஏற்படும் **பித்த வெடிப்புகள்** யாவும் மறையும்.

மருதம் பட்டை பொடியுடன், ஆடாதோடை இலைச்சாறு சிறிது சேர்த்து, ஆட்டுப்பாலில் கலந்து பருகிவர, **நுரையீரலில்,** உடலின் முக்கிய உறுப்புகளில் ஏற்படும் உள் இரணங்கள் ஆறிவிடும்.

மருதம் பட்டை கரிசலாங்கண்ணி பொடிகளை தேனில் ஊறவைத்து உட்கொள்ள, **கல்லீரல் வீக்கம்** போன்ற பாதிப்புகள் சரியாகும். மேலும் **குடல்** சார்ந்த அனைத்து பிரச்னைகளுக்கும் முதன்மையான மூலிகை மருத்துவ தீர்வாக, மருதம் பட்டை அமைகிறது.

**சிறுநீரகத்தில்** உருவான கல் கரைய, பட்டையை நன்கு வேகவைத்து வடிக்கட்டி பருக வேண்டும். இவ்வாறு செய்தால் சிறுநீரகத்தில் உள்ள கல் சிறுநீர் வழியாக வெளியேறி விடும்.

''அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான்; ஒரு **மருதமரத்தை**யாவது கர்வாலிமரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்...'' (ஏசாயா 44:14). மருத மரத்தை ''பெலத்த மரம்'' என்று வேதம் குறிப்பிடுகிறது.

தேவன் படைத்த அரிய படைப்பான இம்மருத மரத்தின் இலை, பழம், விதை, பட்டை என அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டு, பிறரது வாழ்விற்கு உதவுவது போல, நாமும் பிறரது வாழ்வில் வெளிச்சமாக இருந்து உதவுவோம்.

அழகிய தோகையுள்ள மயில், அந்த மரத்திற்குச் செல்ல வழிகாட்டி உதவுங்கள்.



# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

அன்னா தன்னுடைய அறையில் பதட்டத்துடன் உலவிக்கொண்டிருந்தார். எத்தனை பேரைக் கொன்றாலும் மீண்டும் மீண்டும் யாராவது முளைத்து மெசியா என்று சொல்லிக் கொண்டு அலைகிறார்களே என்று அவருடைய மனம் கோபத்தில் இருந்தது. இயேசுவைக் கைது செய்திருப்பார்களா? அல்லது அவன் ஏதேனும் மந்திரம் செய்து மறைந்திருப்பானா? அவனுடைய மனதில் கேள்விகள் அணிவகுத்தபோது கதவு திறக்கும் ஓசை. படைத் தலைவன் நின்றிருந்தான்.

தலைவரே... நசரேயனாகிய இயேசு கைது செய்யப்பட்டார். இதோ உங்கள் முன்னிலையில் கொண்டு வரப்படுகிறார் என்று சொல்ல, அன்னா உற்சாகமானான். சற்று நேரத்தில் கைகள் பிணைத்துக் கட்டப்பட்ட இயேசு அன்னாவின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்.

அன்னா இயேசுவைப் பார்த்தான். சாதாரண உடை, சாதாரண எளிமையான தோற்றம். ஆனால் வலிமையான பார்வை. பதட்டமில்லாத முகம். இயேசுவைப் பார்த்த அன்னாவின் மனதில் குழப்பங்கள் ஓடின. உண்மையிலேயே இந்த மனிதன் இத்தனை அதிசயங்கள் செய்தவனா?



இந்த மனிதனைக் கொல்வதொன்றும் பெரிய செயலாக இருக்காது. எளிமையாக முடிந்து விடும் என்று நினைத்தான் அன்னா. இயேசுவின் ஆதரவாளர்கள் யாருமே கூட இல்லை. எனவே அன்னாவின் தைரியம் இன்னும் அதிகரித்தது. ஆனால் தூரத்தில் பேதுரு தலைக்கு முக்காடிட்டுக் கொண்டே மெல்ல மெல்ல வந்து இருட்டான ஒரு இடத்தில் மக்களோடு மக்களாக நின்று நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இயேசுவைப் பிடிப்பதில் ஏதும் கஷ்டம் இருக்கவில்லையே, அன்னா கேட்டான்.

ஒரு சிறு கைகலப்பு நிகழ்ந்தது. இயேசுவின் சீடர் ஒருவர் நம்முடைய படைவீரன் ஒருவரின் காதை வெட்டி விட்டான். காது துண்டாகி விட்டது.

'என்ன காது துண்டாகி விட்டதா? யாருடைய காது' அன்னா கலவரமானான்.

இதோ இந்த படை வீரனின் காது தான். சுட்டிக்காட்டிய இடத்தில் கண்கள் நிறைய கவலையுடன், குற்ற உணர்வுடன் நின்றிருந்தான் அந்த படை வீரன்.

'என்ன விளையாடுகிறாயா? அவனுடைய காது தான் சரியாக இருக்கிறதே?' அன்னா குழம்பினான்.

'காது துண்டாகி விழுந்தது உண்மை தான் தலைவரே. அந்தக் காதை எடுத்து இயேசு மீண்டும் அதே இடத்தில் வைத்து சரி செய்து விட்டார்.' படைவீரன் சொல்ல அன்னா இரண்டடி பின்வாங்கினான். ஆனாலும் பதட்டத்தை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் இயேசுவைப் பார்த்துப் பேசினான்.

உன் மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு என்ன தெரியுமா? நீ உன்னைக் கடவுளின் மகனாகக் காட்டிக் கொண்டாயாம். போலித் தீர்க்கத்தரிசனம் சொன்னாயாம். இதற்கு என்ன சொல்கிறாய்?

இயேசு மெலிதாய் புன்னகைத்தார். 'நான் எல்லாவற்றையும் வெளிப்படையாகத் தான் பேசினேன். தொழுகைக் கூடங்களில் உரையாற்றினேன். ஆலயங்களில் போதித்தேன். யூதர்கள் கூடியிருந்த கூட்டங்களில் பேசினேன். எதையும் மறைமுகமாகப் பேசவில்லை. நான் பேசியதைக் கேட்டவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' இயேசு சொன்னார்.

அன்னாவின் புருவங்கள் உயர்ந்தன. இயேசுவின் பதிலில் இருந்த உட்பொருள் அவரை வியக்க வைத்தது. ஆம், அல்லது இல்லை என்று ஒரு பதிலைச் சொல்லாமல் இயேசு சொன்ன பதிலில் ஒரு குடிமகனுக்குரிய உரிமைகளையும், மோசேயின் சட்டங்களுக்குட்பட்டு வாழும் ஒருவனுடைய மனித உரிமையுமே வெளிப்பட்டன. மக்களின் சாட்சிகளை வைத்தே இயேசு குற்றவாளியென்று தீர்ப்பிடவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டார் அன்னா.

'ஓ.. அப்படியா... நீ சொன்னதை நிரூபிக்க வேண்டும் என்கிறாயா? நிரூபித்துக் காட்டுகிறேன்...' தன்னுடைய தாடியைத் தடவிக்கொண்டே அன்னா கூற இயேசு மீண்டும் புன்னகைத்தார்.

அன்னாவிடமிருந்து இயேசு நேரடியாக தலைமைச் சங்கத்தின் முன்பாக கொண்டு செல்லப்பட்டார். அன்னாவின் மாளிகையிலிருந்து இருபது நிமிட நடை பயணம். இரவில் அனைவரும் அன்னாவின் மாளிகையிலிருந்து தலைமைச் சங்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பேதுருவும் அவர்களோடு இருந்தார்.

நேற்றுவரை சுதந்திரப் பறவையாக போதித்துக் கொண்டிருந்த இயேசு இன்று சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு காய்பாவின் முன்னிலையில் ஒரு மேடையில் நின்று

கொண்டிருந்தார். அந்த இடம் கல்மண்டபம் என்று அழைக்கப்பட்டது. தன்னுடைய உயிருக்கு ஆபத்தான சூழல் என்பதை அறிந்திருந்தும் ஆனாலும் அவருடைய கண்களில் இருந்த உறுதி கலையவில்லை.

பேதுரு தலைக்கு முக்காடிட்டுக் கொண்டே மெல்ல மெல்ல காய்பாவின் மாளிகைக்குள் வந்து இருட்டான ஒரு இடத்தில் மக்களோடு மக்களாக அமர்ந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'சாட்சிகளைத் தயார் செய்துவிட்டீர்களா?' சத்தமில்லாமல் அருகிலிருந்த தலைமைச் சங்கத்தான் ஒருவனின் காதில் கிசுகிசுத்தார் காய்பா.

'ஆட்களை அனுப்பியிருக்கிறோம். எத்தனை செலவானாலும் பரவாயில்லை என்று சொல்லியிருக்கிறோம். எப்படியும் சாட்சிக்கு ஆட்கள் கிடைத்து விடுவார்கள்.'

'காதும் காதும் வைத்த மாதிரி எல்லாம் நடக்க வேண்டும். மக்களிடையே மத வெறி அடங்கி விடாமல் பார்த்துக் கொள்வது தான் முக்கியம்.'

'அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அவனுடைய சீடனையே அவனுக்கு எதிராகத் திருப்பினோமே... சாட்சிகளைப் பிடிப்பதா பெரிய விஷயம்?'

'ம்... இரண்டு சாட்சிகள் வேண்டும். இரண்டு பேரும் ஒரே போல ஒரே குற்றச்சாட்டைச் சொல்லவேண்டும். அது தான் சட்டம். அதை நினைவில் கொள்ளுங்கள்' காய்பா கிசுகிசுத்தான்.

'மக்களுக்காக ஒருத்தன் சாவது நல்லது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே. அது இன்று நடக்கவேண்டும். அதற்கு என்ன தேவையோ அதைத் தயாராக்கும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள்' காய்பாவும் தலைமைக்குருவும் கிசுகிசுப்பாய் பேசினார்கள்.

இயேசு அமைதியாக நின்றார்.

பேதுரு முற்றத்தில் அமர்ந்து நடப்பவற்றை அனைத்தையும் நடுங்கும் உடலோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஏய்... நீ அவனோடு இருந்தவன் தானே' திடீரென தனக்குப் பின்னால் எழுந்த குரலினால் நிலைகுலைந்து போய் நிமிர்ந்தார் பேதுரு. அங்கே ஒரு பணிப்பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் காய்பாவின் நம்பிக்கைக்குரிய பணிப்பெண்.

'என்ன சொன்னீர்கள்?'

'நீ.. இயேசுவோடு இருந்த மனிதர்களில் ஒருவன் தானே?'

'நானா... இயேசுவோடா? ம்... அவர் யாரென்றே எனக்குத் தெரியாது' பேதுரு பயத்துடன் மறுத்து தன்னுடைய தலையை வேறு பக்கமாய்த் திருப்பிக் கொண்டார்.

பேதுரு திக் திக் மனதுடன் அங்கே அமர்ந்திருந்தார். இயேசு திடீரென சங்கிலிகளை உடைத்துக் கொண்டு சட்டென்று மறைந்துவிடுவார் என்றே இமைகளை மூடாமல் பார்த்துக் கொண்டே இருந்தார்.

'ஏய்ய்... நீ...' பேதுருவின் பின்னால் ஒரு முரட்டுக் குரல்.


பேதுரு சர்வநாடியும் ஒடுங்கிப் போய் திரும்பினார்.

'நீ... அவருடன் இருந்த சீடர்களில் ஒருவன் தானே? உன்னை நான் அவரோடு பார்த்திருக்கிறேனே?' ஒருவன் பேதுருவிடம் கேட்டான்.

'நானில்லையப்பா அது. வேறு யாராவது இருக்கும். அவர்கள் எல்லாரும் தான் ஓடிவிட்டார்களே.' பேதுரு சமாளித்தார்.

‘ஆனால் உன்னைப் போலவே ஒருவன் அவனோடு சுற்றிக் கொண்டிருந்தான்...’

‘இ..இருக்கலாம். ஆனால் அது நானில்லை. அவனோடு சுற்றிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் வேலையற்றவர்கள். நான் அப்படியல்ல..’ பேதுரு சகஜமாய் சொல்ல முயன்று தோற்றுப் போய் செயற்கையாய்ப் புன்னகைத்தார். அவன் சந்தேகம் அகலாதவனாகச் சென்றான்.



மூன்றாம் முறையாக ஒரு நபர் பேதுருவின் அருகே வந்து தீப்பந்த வெளிச்சத்தில் அவரை உற்றுப் பார்த்தார்.

‘நீ கலிலேயன் தானே? அந்த இயேசுவின் சீடர்களில் ஒருவன் தானே உண்மையைச் சொல்’ அவனுடைய குரலில் மெலிதான கோபம் இருந்தது.

‘நானா? அந்த மனிதனோடா? இல்லவே இல்லை.’ பேதுரு அவசர அவசரமாக மறுத்தார்.

தொலைவில் நின்றிருந்த இயேசு பேதுரு இருந்த திசை நோக்கி மெல்ல தலையைத் திருப்பினார். அப்போது வெளியே சேவல் கூவும் சத்தம் கேட்டது. சேவலின் குரலைக் கேட்டதும் பேதுருவின் உள்ளம் உடைந்தது.

‘இன்றிரவு சேவல் கூவும் முன் என்னை மூன்று முறை மறுதலிப்பாய்...’ என்று பேதுருவிடம் இயேசு சொல்லியிருந்த வார்த்தைகள் பேதுருவின் உள்ளத்துக்குள் ஈட்டிகளாய்ப் பாய்ந்தன. அவருடைய கண்களும், மனமும் கலங்கியது. உடனே வெளியே சென்ற பேதுரு கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.

தொடரும்...



கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

✆ 9003067777

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482 CHENNAI - 600 034. |

G Pay **98406 95296**

# விடுகதைகள்

1. எங்கும் குறை, எதிலும் குறை, நிறைகளைத் தேடியே நித்தமும் ஓடினாலும் குறைவு ஏதும் இன்றியே குதூகலமாய் வாழுவார் - அவர்கள் யார்?
2. அரைக்கிற ஆலை தனில் அடைப்பட்டுக் கிடப்பான்; ஆயுள் சக்கரத்தை அரை நொடியில் எரிப்பான்; அடக்கினால் வாழ்வு, இல்லையெனில் அழிவு - அது என்ன?
3. பூமியெல்லாம் காய, தோல்மட்டுமே நனைய, தோல் மட்டும் காய, பூமியெல்லாம் நனைய, வேண்டிக் கொண்டான் ஒருவன் - அவன் யார்?
4. ஒன்றே ஒன்றை வாங்கி உருட்டிப் புரட்டிப் பார்த்து குழியைத் தோண்டி புதைத்து வெளியே எடுத்துக் கொடுத்து இருட்டு அறையில் விழுந்தான் - அவன் யார்?
5. சுற்றி சுற்றி வந்து, சத்தம் போட்டு கத்தி, பொத்தென்று விழுந்ததால் இஸ்ரவேலர் சொந்தமாக்கி கொண்டனர் - அது என்ன?
6. நஷ்டம் என்று விட்டு விட்டு, குப்பை என்று தூக்கிப் போட்டு, இயேசுவினால் பிடிக்கப்பட்டு, இலக்கை நோக்கி ஓடினார் - அவர் யார்?
7. பட்டாளத்து மனிதன், பக்தியுள்ள மனிதன், தேடி வந்த மனிதர்களின் தேவைகளை சந்தித்தவன் - அவன் யார்?
8. நெறி தவறி நுழைந்ததால் நெற்றியிலே பொட்டு - அது என்ன?
9. இவன் சொன்னால் வருவார்கள், இவன் சொன்னால் போவார்கள், உயிரிடம் சொன்னால் நடக்குமா? உறவுக்காக ஓடினான், உயிரைத் தர வேண்டினான் - அவன் யார்?
10. ஆண்டவரின் ஆலயத்தை அழகுப்படுத்தி பார்ப்பான். அடியேன் கேட்பதாய் அமைதியாய் சொல்லுவான். அனைவருக்கும் மாதிரியான அன்பான நண்பனவன் - அவன் யார்?
11. முன்னே உடல் ஓட, பின்னே தலை திரும்ப, மேலே ஆவி பறக்க, அங்கே தானே நிற்க - அவள் யார்?
12. தவளை போல தன் வாயால் கெட்டவன். தலை கவிழ்ந்து நடந்தான். தலை மேல் பிரச்சனை போக தலை தொங்கி செத்தான் - அவன் யார்?

| | |
|---|---|
| 1. கர்த்தரைத் தேடுகிறவர்கள் - சங் 34:10 | 2. நாவு - யாக் 3:5-10 |
| 3. கிதியோன் - நியா 6:36-40 | 4. ஒரு தாலந்து வாங்கியவன் - மத் 25:24-30 |
| 5. எரிகோ கோட்டை, - யோசு 6:1-21 | 6. பவுல் - பிலி 3:11-14 |
| 7. கொர்நெலியு - அப் 10:1,2 | 8. உசியா. 2 நாளா 26:19 |
| 9. நூற்றுக்கதிபதி - மத் 8:5-10 | 10. சாமுவேல். 1 சாமு 3-10 |
| 11. லோத்தின் மனைவி - ஆதி 19:26 | 12. ஆமான் - எஸ்தர் 7:8-10 |

சரியான விடைகள்:

# மயிலே... மயிலே...



**மயில்** ஒரு அழகான பறவை. தேவன் படைத்த அழகிய படைப்பு. தோகை விரித்து ஆடும் மயிலின் அழகுக்கு மயங்காதவர்கள் எவருமில்லை. மயில் நம் இந்தியாவின் தேசியப் பறவையாகும்.

ஆங்கிலத்தில் மயிலின் பொதுப் பெயர் Peafowl. ஆண் மயிலின் பெயர் Peacock. பெண் மயிலின் பெயர் Peahen. இந்திய மயிலின் அறிவியல் பெயர், பாவோ க்ரிஸ்டாடஸ் (Pavo Cristatus). ஆண் மயிலுக்கு தமிழ் மொழியில், சேவல் என்ற பெயர் உண்டு. உலகின் பல்வேறு பகுதிகளில், வெள்ளை மற்றும் சாம்பல் நிற மயில்கள் காணப்படுகின்றன. உலகில் பல வகை மயில்கள் இருந்தாலும், அவை இந்திய மயில்கள் போல் அழகாக இருப்பதில்லை.

இயற்கையாகவே அவை இந்தியா, பர்மா மற்றும் இலங்கையில் பரவலாக காணப்படும். இயற்கையில் மயில் ஒரு காட்டுப் பறவை என்றாலும், அவை பல நாடுகளில் வளர்க்கப்படுகின்றன. இந்தியாவில் வீட்டில் மயில்கள் வளர்க்க அனுமதியில்லை. மயில்களின் இயற்கையான வாழ்விடம் வனப்பகுதி மற்றும் காடு ஆகும். பொதுவாக மயில்கள் ஓரிடத்தில் இருக்காமல் அலைந்து திரிகின்றன. மயில்கள் மரங்களில் வலம் வர விரும்புகின்றன.

மயில்களால் 11 வித்தியாசமான ஒலிகளை எழுப்ப முடியும். பொதுவாக மயில்கள் மழையை அறிவிக்க ஒலி எழுப்புகின்றன. அகவல், ஆலல், ஏங்கல் போன்ற பல சொற்களால் மயிலின் ஒலியைக் குறிப்பிடுகிறார்கள். சாதாரண நாட்களைவிட, மழைக் காலங்களில் அதிக முறை ஒலியெழுப்பும். காடுகளில் கேட்கும் மயிலின் குரல் மூலம், புலி போன்ற ஆபத்தான விலங்குகளின் இருப்பைத் தெரிந்துகொள்ளலாம்.

தாவரங்கள், விதைகள், பூக்கள், எறும்புகள், தானியங்கள், சிறிய பாம்புகள், தவளைகள், வண்ணத்துப்பூச்சிகள், எலிகள், புழுக்கள், பூச்சிகள், ஊர்வன, சிறிய பாலூட்டிகள் மற்றும் பெர்ரி உள்ளிட்டவற்றை மயில்கள் உண்ணுகின்றன.

மயில் தமிழில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. சிகி, ஞமலி, தோகை, சிகாவளம், சிகண்டி, மஞ்ஞை, ஓகரம், பிணிமுகம், கலாபி, நவிரம், பிலி, கேகயம் என்று பல்வேறு சொற்கள் மயிலைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது.







பெண் மயில்களின் உடல் மங்கலான பச்சையும், பளபளப்புக் கொண்ட நீலமும், பச்சை கலந்த சாம்பல் நிறமும் கலந்தது. நீண்ட தோகை பெண் மயில்களுக்குக் கிடையாது. ஆண் மயிலின் வண்ணமயமான தோகை, பெண் மயில்களை ஈர்க்கவும், பிற விலங்குகள் தாக்க வரும்போது, தனது தோகையை விரித்துக் காட்டி பயமுறுத்தவும் பயன்படுத்தும். மயிலின் தோகை, நாம் பார்க்கும் கோணத்துக்கு ஏற்ப வெவ்வேறு நிறங்களை எதிரொளிக்கும். சரணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், கலாபம், கூழை, பீலி, தொங்கல் மற்றும் தூவி ஆகியன மயில் தோகையின் வேறு பெயர்களாகும்.

மயில்களுக்கு அழகாக நீண்ட தோகை இருந்தாலும், நெடும் தூரம் பறக்க இயலாது. அவை குறிப்பிட்ட தூரம் மட்டுமே பறக்கின்றது. அதிலும் குறிப்பாக தன்னை ஆபத்திலிருந்து காத்துக்கொள்ளவே பறக்கின்றன. நீண்டதூரம் பறக்க இயலாத மயில்கள் உயரமான மரங்கள் போன்றவற்றில் ஏறி அமர்ந்துக் கொள்ளும்.

மயில் உயரமான புல்லில் ஒரு கூட்டை மறைவாக அமைத்து, 5 முதல் 7 முட்டைகளை இடுகிறது. அவை பொதுவாக வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே முட்டைகள் இடும். முட்டை வெளிர் பழுப்பு நிறமாக இருக்கும். பிறந்து ஒரு நாளே ஆன மயில் குஞ்சுகள், தாயின் உதவியின்றித் தானாகவே நடக்க ஆரம்பிக்கும். உணவு உண்ணவும், நீர் அருந்தவும் செய்யும்.

மயில்கள் 20 ஆண்டுகள் வரை உயிர்வாழும் தன்மை கொண்டது. ஆனால், பூங்காக்கள் மற்றும் மனித தடைக்கு உட்பட்ட பகுதிகளில் 40 ஆண்டுகள் வரை உயிர்வாழும். வேட்டையாடுதல் மற்றும் மக்கள் தொகைப்பெருக்கம் உள்ளிட்ட காரணங்களால் மயில்களில் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்தியாவில் தற்போது மிகவும் குறைந்த அளவிலான மயில்களே உள்ளன.

''ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத்தந்தங்களையும், குரங்குகளையும், **மயில்**களையும் கொண்டுவரும்'' என 1 இராஜாக்கள் 10:22இல் வாசிக்கிறோம். அந்நாட்களில் பொன், வெள்ளியைப் போலவே மயிலும் பெருமைக்குரியதாக பார்க்கப்பட்டது.

# மூன்று முறை மறுதலித்த பேதுரு

## இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.





விடைகள்: 1. ஆணின் ஆடை, 2. பெண்ணின் முக்காடு, 3. மின் விளக்கு
4. தலைப்பாகை டிசைன், 5. பூங்கொத்து

பெற்றோர் பகுதி

# உங்கள் பிள்ளைகள் எப்படி?

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்று சங்கீதம் 127:4ல் வாசிக்கிறோம். கர்த்தர் கொடுத்திருக்கிற பிள்ளைகளை கர்த்தருக்குப் பிரியமாக வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. முதலாவது, கர்த்தருடைய வசனத்தை பிள்ளைகளுக்கு கருத்தாய் போதிக்க வேண்டும். உபாகமம் 6:7ல் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்களிடத்தில், நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்கிறபோதும், எழுந்திருக்கும்போதும், அவைகளைக்குறித்துப் பேச வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் எனது திருச்சபையின் ஞாயிறு பள்ளியில் 200க்கும் அதிகமான பிள்ளைகள் இருந்தார்கள். ஆனால் இன்று அதில் நான்கில் ஒரு பங்கு பிள்ளைகள் கூட ஞாயிறு பள்ளிக்கு ஒழுங்காக வருகிறதில்லை. இது எனது திருச்சபையின் ஞாயிறு பள்ளியில் மட்டுமல்ல, பெரும்பாலான ஞாயிறு பள்ளிகளில் நிலமை இதுதான். இன்றைக்கு நாட்டில் சிறு பிள்ளைகளின் எண்ணிக்கை திடீரென்று குறைந்து விட்டதா? இல்லவே இல்லை. பெற்றோர்கள், பிள்ளைகள் ஒழுங்காக ஞாயிறு பள்ளிக்கு செல்வதைக்குறித்து அக்கரை காட்டுகிறதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளிலேயும் அவர்கள் தொலைக்காட்சி அல்லது கணிணி முன்னால் அமர்ந்து பொழுதைப்போக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஞாயிறு பள்ளி மாணவனாக இருந்தபோது, மனன வசனம் ஒப்புவித்தலில் கடுமையான போட்டிகள் இருந்தது. சிலர் 3000க்கும் அதிகமான வசனங்களை ஒப்பித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஞாயிறு பள்ளிக்கு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கையும், அதில் வசனம் படிப்பவர்களின் எண்ணிக்கையும், படிக்கும் வசனங்களின் எண்ணிக்கையும், நாள்பட்ட கண்ணாடி போல மங்கியிருக்கிறது.



நியாதிபதிகளின் புத்தகத்தின் தொடக்கத்தில், அதாவது 2ம் அதிகாரம் 10ம் வசனத்தில், கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காக செய்த சகல கிரியைகளையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று என்று வாசிக்கிறோம். இஸ்ரவேலில் இப்படியொரு சந்ததி வந்ததற்கான காரணம், அவர்களுடைய பெற்றோர், தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டிருந்த படி, தங்கள் பிள்ளைகளுக்கு வசனத்தை போதிக்காமல் விட்டு விட்டார்கள். அதன் விளைவு என்ன? அதே நியாதிபதிகள் புத்தகம் இறுதி அதிகாரம், இறுதி வசனம் இப்படிப்பட்ட பரிதாபமான நிலையில் முடிவடைகிறது. அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிபோன படி செய்து வந்தான்.

இன்றைக்கும் அநேக கிறிஸ்தவ பிள்ளைகள் கூட சரியான குணநலன்கள் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம், வேத வசனங்களை படிக்க வேண்டிய நேரத்தை தொலைக்காட்சியும், கணிணியும், பள்ளிகளின் சிறப்பு பயிற்சி வகுப்புகளும் பிடித்துக் கொண்டிருக்கின்றன. வேத வாசிப்பும் ஜெப ஐக்கியமும் குறைந்திருக்கின்றன. விளைவு, சிறு பிள்ளைகள் கூட மிக அதிகமான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்துகொள்ளவதை நாம் செய்தித்தாள்களில் வாசிக்கிறோம். ஆசிரியரை கொலை செய்யும் அளவுக்கு துணிகிறார்கள், கொலை மிரட்டல் விடுகிறார்கள், பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுகிறார்கள், சக மாணவர்களை கடத்தி கடத்தல் நாடகமாடுகிறார்கள். அவரவர் தன் தன் பார்வைக்கு சரிபோன படி செய்து வருகிறார்கள்.

இன்றைக்கு சிலர் தங்கள் பிள்ளைகளை, நாங்கள் அடிப்பதே இல்லை, அவன் என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுத்து விடுவோம், மிகவும் செல்லமாக வளர்க்கிறோம் என்று மற்றவர்களிடத்தில் பெருமையாக சொல்லக் கேட்டிருகிறேன். ஆனால் வேதம் என்ன சொல்கிறது? நீதிமொழிகள் 29:15ல் பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்துக்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான் என்று நாம் வாசிக்கிறோம். மேலும், பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்றும் நீதிமொழிகள் 22:6ல் வாசிக்கிறோம். உங்கள் பிள்ளைகள் இதில் எங்கே இருக்கிறார்கள்?

## தலைநிமிர்ந்துவார்...

நாற்பது வருடம் அரண்மனையில் உருவாக்கப்பட்ட மோசே
கர்த்தரால் பயன்படுத்தப்படவில்லை, நாற்பது வருடம்
வனாந்திரத்தில் உடைக்கப்பட்ட மோசே தான் கர்த்தரால்
பயன்படுத்தப்பட்டார்...!!!
இன்று நீங்கள் உடைக்கப்படுவதை நினைத்து சோர்ந்துப்
போகாதீர்கள் நாளை கர்த்தர் உங்களை பயன்படுத்தும் போது நீங்கள்
கற்பனைக் கூட செய்துப் பார்க்காத மகிமை உங்களை தேடி வரும்.
கர்த்தர் ஒருவனை உடைப்பது தான் அவன் உயர்வின் ஆரம்பம்,
அது வேடிக்கை பார்க்கும் மனிதர்களுக்கு புரியாது....!!!
நிந்தைக்கும், அவமானத்திற்கும், பழிச்சொல்லுக்கும் ஆனான
அன்னாளை ஆசிர்வதித்து அவளை களிகூரப்பண்ணின தேவன்,
நிந்தித்தவர்களுடைய கண்களுக்கு முன்பாக உங்களை
தலைநிமிர்ந்து நடக்கப்பண்ணுவார்....!!!

# கேட்டாரே ஒரு கேள்வி Q&A

**ஆதார் அடையாள அட்டையை (Aadhar Card) அந்திக்கிறிஸ்துவின் செயலாக கருதலாமா? விசுவாசிகள் நாம் அதை எடுக்கவேண்டுமா? எனது ஐயத்தை தெளிவாக்கவும்.**

– திருமதி. **மேபல் செல்வகுமாரி**, சாத்துமா நகர்



அந்திக்கிறிஸ்துவின் காலம் இன்னும் வரவில்லை. இன்னும் நிறைவேறவேண்டிய தீர்க்கதரிசன சம்பவங்கள் நிறைய இருக்கிறது. ஆனால் அந்திக்கிறிஸ்துவின் செயல் அவனுக்காக உள்ள ஆயத்த ஏற்பாடுகள் இப்போது நடைபெற்றுகொண்டிருக்கின்றன. ஆகவே இப்போதுள்ள சூழ்நிலையில் முதலாவது அவர் வருகைக்கு அல்லது நம் மரணத்துக்கு நம்மை ஆயத்தப்படுத்தி நம் சாட்சியுள்ள வாழ்க்கை மூலமாக கிறிஸ்துவை மக்களுக்கு காட்டி மற்ற ஆத்துமாக்களுக்காக நாம் ஜெபிப்பதும், சுவிசேஷம் அறிவிப்பதும், சுவிசேஷம் அறிவிக்கப்பட்டவர்களுக்கு இயேசுவின் இரண்டாம் வருகையைப்பற்றி அறிவிப்பதும் மிக முக்கியமாகிறது. கடைகளில் காணப்படும் கம்ப்யூட்டர் கோடுகள், கம்யூட்டர் அடையாளங்கள் லேசர் மூலம் அறியப்படுதல், சிப் (Chip) நம் கைகளில் பொருத்தப்படுதல் இவைகள் எல்லாம் பொருளாதார நவீன மயமாக்கப்படுதலின் ஆரம்பம் ஆகும். இவைகளோடு நம் ஒத்துப்போக வேண்டியது இப்போதையகாலத்தின் கட்டாயம் ஆகும். இவைகளுக்கொல்லாம் நீங்கள் ஒத்துப்போகவில்லையானால் சூப்பர் மார்க்கெட்டில் ஒரு பொருளும் வாங்கமுடியாது. துணிகள், ரெடிமேட் உடுப்புகள் இவைகளில் விலைப்பட்டியலில் ஒட்டி வைக்கப்பட்டிருக்கும் கம்யூட்டர் குறியீடு இவைகளையும் நீங்கள் தவிர்க்கவேமுடியாது.

அதுபோல ஆதார் அடையாள அட்டையையும் தவிர்க்க முடியாது. அதைக்குறித்து யாரும் இப்போதைக்கு பயப்படவேண்டாம். எத்தனையோ வருடங்களுக்கு முன்பே வெளிநாடுகள் முழுவதும் அந்த அடையாள அட்டையை நடைமுறைக்கு கொண்டுவந்துவிட்டார்கள். ஐஈ-கார்டு முதல் டிரைவிங் லைசன்ஸ் வரை எல்லாவற்றிலும் உங்கள் அனைத்து பேங்க் கணக்குகளின் விவரம் உங்கள் குடும்ப விவரம், நீங்கள் பழைய குற்றவாளியாக இருந்தால் அதன் விவரம் அதோடு எத்தனை முறை நீங்கள் ஜெயில் போய் வந்தீர்கள், எத்தனைமுறை போலீஸில் தொடர்புக்கொண்டீர்கள் போன்ற அத்தனை விவரங்களும் அந்த ID-யிலும் டிரைவிங் லைசென்ஸ்ஸிலும் காணப்படும். உங்கள் பூர்வீகம் முதல் இப்போதுள்ள உங்கள் வாழ்க்கை விவரம் அத்தனையும் அந்த அடையாள கார்டுகள் மூலம் கண்டறியலாம். நம் இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ள ஆதார் அடையாள அட்டை வெறும் ஆரம்பம்தான். இந்த அடையாள அட்டை இல்லாமல் நீங்கள் வெளியே போய்வரமுடியாது என்ற நிலை நிச்சயம் வரும். இன்னும் சிலகாலம் கடந்தால் உங்களைப்பற்றிய அனைத்து விவரங்களையும் நம் அரசாங்கம் தானாக அதில் பதியவைத்து வெளிநாடுகளில் இப்போது காணப்படும் ID-போல நம் நாட்டிலும் அடையாள அட்டை நடைமுறைக்கு கொண்டுவந்துவிடுவார்கள். இது மிகவும் அவசியமாகும். இதற்காக யாரும் பயப்படவேண்டாம். நாங்கள் எங்கள் குடும்பமாக ஆதார் அடையாள அட்டைக்கு முகத்தையும், கைரேகைகளையும்பதியவைத்து அரசாங்க கட்டளைக்கு கீழ்ப்படிந்துள்ளோம். இது அந்திக்கிறிஸ்துவின் கட்டளையல்ல. பயம் வேண்டாம்.

# அர்ப்பணிப்பு

தீங்கு நாட்கள்
வராததற்கு முன்னும்,
நான் வெறுக்கும் வருஷங்கள்
என்னை தொடராததற்கு முன்னும்,

உலகமும் அதிலுள்ளவைகளும்
என்னை மயக்கும் முன்னும்
உலக கவலைகள் என்னை
பிடிக்கும் முன்னும்

என் கால்கள் இரண்டும்
பெலனற்று போகும் முன்னும்
என் புயங்கள் தன் பெலவீனத்தை
அறிந்துக்கொள்ளும் முன்னும்

என் மூச்சுக்காற்றின் வேகம்
லேசாக குறையும் முன்னும்
என் சிந்தனை திறன்
சோர்ந்துபோகும் முன்னும்

நாடி நரம்புகள்
ஆடி அசைந்துபோகும் முன்னும்
நான்கேழு வருடங்கள்
என் வயதை தொடும் முன்னும்

உலக சிநேகத்தில்
நான் மயங்கும் முன்னும்
உலக மனுஷர்களில் எனக்கு
அருமையானவர்களை
இழக்கும் முன்னும்

தேவனே உம்மை நினைக்கிறேன்.

துள்ளித் திரியும் என் இளமை
காலத்தை உமக்கு அர்ப்பணிக்கிறேன்!
தூய என் பரிசுத்த வாலிபத்தை
உமக்கே அர்ப்பணிக்கிறேன்

இனி,
என் ஆவி ஆத்துமா சரீரம்
உமக்கே!
உமக்கொருவருக்கே!!

நீர் அனுப்பும் இடம் நோக்கி
என் கால்கள் செல்லட்டும்
நீர் விரும்பும் செயலை
என் கைகள் செய்யட்டும்

நீர் சொல்லும்
சொற்களையே
என் வாய் பேசட்டும்
நீர் விரும்பும் வண்ணமே
என் ஜீவன் வாழட்டும்!

இப்படிக்கு,
தேவன் விரும்பும் மனிதன்



# காரியம் மாறுதலாய் முடியட்டும்

மணிப்பூர் மாநிலத்தில் மேய்தி மற்றும் குக்கி, நாகாக்கள் இடையே ஏற்பட்ட மோதலானது கடந்த ஒரு மாதமாக பற்றியெறிந்ததை நாம் அனைவரும் அறிவோம். சில சதிகாரர்கள் மேய்தி இன மக்களை தங்களது மதவாத செயல்திட்டத்திற்கு வளைத்துப் போட நினைத்தார்கள். ஆனால் அம்மக்களே இன்று அமைதி வேண்டி வீதியில் திரள்கிறார்கள்.

வேதத்திலே கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர்களை தீர்த்துக்கட்ட ஆமான் என்ற சதிகாரன் அகாஸ்வேரு மன்னன் மூலமாக சதித்திட்டம் தீட்டினான். ஆனால் கர்த்தரால் தமக்கென தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் வைராக்கியமும், ஆபத்துக்காலத்தில் கர்த்தரிடம் எழுப்பிய அபயக்குரலும் காரியத்தை தலைகீழாய் மாற்றிப் போட்டது.

ஆம், ''அடைப்பைப் பிடுங்குகிறவனை பாம்பு கடிக்கும். கல்லைப் பெயர்க்கிறவன் கல்லால் காயமடைவான். தான் வெட்டிய குழியில் தானே விழுவான்'' என்பதெலல்லாம் வானமும் பூமியும் மாறினாலும் மாறாத வேதத்திலுள்ள பொன் எழுத்துக்கள்.

அதுபோல மணிப்பூரில் காரியம் மாறுதலாய் முடியத் துவங்கியிருக்கிறது. கர்த்தரை நோக்கி ஒத்தாசைக்காக எழுப்பப்படும் அபயக்குரல்களை கர்த்தர் ஒருபோதும் தள்ளிவிடுவதில்லை. ஆகவே மணிப்பூர் மாநிலத்தில் தேவன் அமைதியையும், சமாதானத்தை கட்டளையிடும்படியாக ஊக்கமாக ஜெபிப்போம்.



# அரபெல்லா மெரில்




அரபெல்லா மெரில் என்பவர் 'டிசைப்பிள்ஸ் ஆஃப் கிரைஸ்ட்' (Disciples of Christ - கிறிஸ்துவின் சீடர்கள்) என்ற அமைப்பின் மூலம் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட முன்னோடி மருத்துவ மிஷனெரியாவார். ஆன் ஆர்பர் (Ann Arbor) என்னும் ஊரில் அவர் ஒரு மருத்துவ கல்லூரியில் மருத்துவம் கற்று, 1887ஆம் ஆண்டு மிக உயர்ந்த கௌரவ பட்டம் பெற்றார். பின்பு சிகாகோ மற்றும் மிஷிகன் ஆகிய ஊர்களின் மருத்துவமனைகளில் மருத்துவராக பணி புரிந்தார். அந்நாட்களில், இந்தியாவில் ஊழியம் செய்த பண்டித ராமாபாய் (Pandita Ramabai) என்பவரின் ஊழியத்தைப் பற்றி கேள்விப்பட்டார். பண்டித ராமாபாயின் சவால் நிறைந்த சாட்சி, மெரிலையும் அவரது மிக நெருங்கிய நண்பரான ஒலிவியா பால்ட்வினையும் (Olivia Baldwin) இந்தியாவிற்கு சென்று மருத்துவ மிஷனெரியாக தேவனை சேவிக்க ஊக்கமளித்தது.

1889ஆம் ஆண்டு அவர்கள் ஒன்றாக இந்தியா வந்தடைந்து, மத்திய இந்தியாவில் பிலாஸ்பூரில் (Bilaspur) தங்கள் பணியை துவங்கினர். நகரத்திலும், அதை சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் பிணியாளிகளுக்கு மருத்துவ பராமரிப்பு வழங்கி வந்தனர். அவ்விருவரும் சரீர பிரகாரமான சுகத்தை தாண்டி, ஆத்துமாவின் ஆவிக்குரிய நலன்மேல் நோக்கமாயிருந்தனர். எனவே, மருத்துவ சேவைகளுடன் எப்பொழுதும் வேதாகம போதனையும் கைகோர்த்து நடந்தது. இந்திய மக்களிடம் கிறிஸ்துவை அறிவிக்க மொழியை ஒரு தடையாக அவர்கள் கருதவில்லை. அவர்கள் நோயுற்றோரை பராமரிக்கும் வேளைகளில் அவர்களுடன் சேர்ந்து, எப்பொழுதும் ஒரு வேத வாசகர் இவ்வுலகில் கிறிஸ்து செய்தவற்றை மக்களுக்கு போதித்து வந்தார். ஒரு மருத்துவராக மெரிலின் வேலை மிகவும் கடினமானதாக இருந்தாலும், அவர் தனது அனைத்து கடமைகளையும் மிகுந்த அனுதாபத்துடனும் முழு அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றினார். அவர் தன் பொறுப்புகளை நிறைவேற்றிய விதம், கிறிஸ்துவானவர் ஜீவத்தண்ணீரண்டைக்கு களைப்புற்ற ஆத்துமாக்களை ஈர்த்த விதம் போலவே இருந்தது.

1894ஆம் ஆண்டின் இறுதிக்குள், மெரில் உடல்நலக்குறைவு காரணமாக இந்தியாவை விட்டுசெல்ல நேர்ந்தது. குணமடைந்த பிறகு, அவர் அலாஸ்காவிற்கு சென்று பின்னர் கனடாவின் க்ளோன்டைக் என்ற ஊருக்கு சென்றார். அங்கு அவர் சில காலம் மிஷனெரி பணிகளை மேற்கொண்டார். மேலும் Christian Woman's Board of Missions அமைப்பாளராக பணியாற்றி வந்தார். உறுதியுடனும், வாஞ்சையுடனும் தேசமெங்கிலும் உள்ள சபைகளுக்கு சென்று, ஊழிய பணித்தளங்களில் சேவை புரிய அங்குள்ள வாலிப ஆண்மக்களையும் பெண்மக்களையும் ஊக்குவித்தார். அநேகருக்கு ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும் வாழ்ந்த மெரில், இறுதிவரை உண்மையும் தாழ்மையும் உடைய தேவ ஊழியராக திகழ்ந்தார்.

# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்


## (துல்லிய தாக்குதல்)





ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். - கலாத்தியர் 6:2




உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். - சங்கீதம் 91:11




இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். - யோவான் 8:31-32




நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை.... - உபாகமம் 31:6

# நல்ல சமாரியன்

(லூக்கா 10 : 25-36) திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து அவரைச் சோதிக்கும் நோக்குடன், ''போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

அதற்கு இயேசு, ''திருச்சட்ட நூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கிறீர்?'' என்று அவரிடம் கேட்டார்.

அவர் மறுமொழியாக, 'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' என்று எழுதியுள்ளது'' என்றார்.

இயேசு, ''சரியாய்ச் சொன்னீர்; அப்படியே செய்யும்; அப்பொழுது வாழ்வீர்'' என்றார்.

அவர், தம்மை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி, ''எனக்கு அடுத்திருப்பவர் யார்?'' என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாகக் கூறிய உவமை:

''ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை அவர்கள் உரிந்து கொண்டு, அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப் போனார்கள். குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறு பக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்துக்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார். மறுநாள் இருதெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, 'இவரைக் கவனித்துக் கொள்ளும்; இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்' என்றார்.

''கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது?'' என்று இயேசு கேட்டார். அதற்கு திருச்சட்ட அறிஞர், ''அவருக்கு இரக்கம் காட்டியவரே'' என்றார். இயேசு, ''நீரும் போய் அப்படியே செய்யும்'' என்று கூறினார்.

இயேசுவிடம் கேள்வி கேட்பவர்கள் பெரும்பாலும் அவரை எப்படியாவது மாட்டி விடவேண்டும் எனும் நோக்கத்தில் தான் கேள்விகளைக் கேட்டார்கள். அதிலும் குறிப்பாக, மறைநூல் அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், பரிசேயர்கள், குருக்கள் போன்றவர்களுடைய கேள்விகள் இரண்டு சிந்தனைகளை உள்ளடக்கியனவாகவே இருந்தன.

1. தங்களுடைய மறை ஆளுமையை, மத அறிவை வெளிப்படுத்த வேண்டும் எனும் நோக்கம்.

2. இயேசுவை அவரது வாயாலேயே மாட்ட வைக்க வேண்டும் எனும் சிந்தனை.

இந்த கேள்வியும் அப்படிப்பட்ட ஒரு கேள்வி தான். இங்கே கேள்வி கேட்ட நபர் திருச்சட்டத்தை அலசி ஆராய்ந்தவர். மத சட்டங்களின் சந்து பொந்துகளில் உலாவியவர். அவருடைய கேள்வி ''நிலைவாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும்'' என்பது.

யூதர்களுடைய நம்பிக்கைப்படி, நிலைவாழ்வு பெறவேண்டுமெனில் மத சட்டங்களைக் கடைபிடித்தால் போதும். இயேசு என்ன சொல்கிறார் என்பதைக் கேட்பதற்காக அவன் அந்தக் கேள்வியை இயேசுவின் முன்னால் வைக்கிறான்.

சட்ட வல்லுநருக்கு இயேசு சட்டத்தின் வழியிலேயே சென்று ஒரு கேள்வியைக் கேட்கிறார். ''திருச்சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறது ?''

கேள்வி கேட்டவனுக்கு குஷி. இந்த ஏரியாவில் அவன் எக்ஸ்பர்ட். சட்டென சொல்லி விடுகிறான் பதிலை. எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனை நேசி, உன்னைப் போல உனக்கு அடுத்திருப்பவனை நேசி. அது தான் திருச்சட்டத்தின் சாரம்சம் என்றான்.

சரியாகச் சொன்னாய். அப்படியே செய், உனக்கு நிலைவாழ்வு கிடைக்கும் என்றார் இயேசு.

எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனை நேசிப்பவன், மனிதனை நேசிக்காமல் இருக்க முடியாது. ''என்னை நேசிப்பவன் என் கட்டளைகளைக் கடைபிடிப்பான்'' என்பதே இயேசுவின் வாக்கு. இறைவனின் கட்டளைகள் மனிதனை அன்புசெய்வதில் தான் நிறைவு பெறுகின்றன.

கேள்வி கேட்டவனுக்கு அத்துடன் திருப்தி வரவில்லை. தான் எல்லாமே பக்காவாக செய்து வருவதாக அவனுக்கு ஒரு தற்பெருமை. கேள்வி கேட்டவன் ஒரு யூதனாய் இருக்கலாம். அவன் தன்னுடைய நேர்மைத் தன்மையை வெளிப்படுத்தி விடும் நோக்கில் அடுத்த கேள்வியைக் கேட்டான்.

''யார் எனக்கு அடுத்திருப்பவன்'', எனது அயலான் யார் ? யார் எனக்கு பிறன் ?

அப்போது தான் இயேசு இந்த உவமையைச் சொல்கிறார்.

வழியிலேயே கள்வர்களால் குற்றுயிராக்கப்பட்ட நிலையில் கிடக்கிறார் ஒரு மனிதர். ஒரு குரு, குருவுக்கு உதவி செய்யும் லேவியர் இருவரும் தற்செயலாய் அந்த வழியாய் வருகின்றனர். ஆனால் அவனைக் கண்டதும் விலகிச் சென்றனர். அவனுக்கு உதவ மத மனங்கள் முன்வரவில்லை. அப்போது அங்கே பயணமாய் வருகிறான் சமாரியன் ஒருவன். யூதர்களின் ஜென்ம விரோதி.

அவன் அடிபட்டவனை நெருங்கி, முதலுதவி செய்து, விலங்கின் மீது ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டு சென்று, பணம் கொடுத்து, மீண்டும் தேவைப்பட்டால் தருவதாக உத்தரவாதமும் கொடுத்து கிளம்பிச் செல்கிறான்.

இப்போது இயேசு கேள்வியை திருப்பிக் கேட்கிறார். அடிபட்டவனுக்கு யார் அயலான் ? ''அவனுக்கு இரக்கம் காட்டியவனே'' என்கிறான் திருச்சட்ட வல்லுநர். அவனுடைய வாயில் அந்த 'சமாரியன்' எனும் வார்த்தையே வரவில்லை. அந்த அளவுக்கு வெறுப்பு அவனுக்குள் இருந்தது.

இயேசு சொன்னார், ''நீயும் போய் அவ்வாறே செய்''

தேவையில் இருக்கும் நபருக்கு உதவுபவனே அடுத்திருப்பவன். அதாவது இதயங்களால் அடுத்திருக்க வேண்டும், உடலாலோ, நில எல்லைகளாலோ அடுத்திருப்பதில் எந்த பயனும் இல்லை. மனித நேயத்தை மறுதலிக்கும் விஷயங்களில் இறைவன் இருப்பதில்லை.

இந்த உவமை நமக்கு பல்வேறு விஷயங்களைக் கற்றுத் தருகிறது. அந்த படிப்பினைகளில் ஒரு பத்து சிந்தனைகளைப் பார்ப்போம்.

1. மிக முக்கியம் என நாம் நினைக்கின்ற நமது அன்றாட வேலைகளுக்கும், பிறருடைய

தேவைகளுக்கும் இடையேயான போராட்டம் இங்கே வெளிப்படுகிறது. குருவும், லேவியும் தங்களுடைய ஆலயப் பணியே மனித நேயப் பணியை விட முக்கியம் என நினைத்து ஒதுங்கிச் சென்றார்கள். ஆனால் கடவுள் அவர்களை விட்டு விலகியே இருக்கிறார்.

2. மத சட்டங்கள், சம்பிரதாயங்களை மனித நேயப் பணிகளுக்காக விட்டு விடுவதும், மீறுவதுமே இறைவன் விரும்புவது. அதையே தனது போதனைகளில் அவர் பலமுறை சுட்டிக் காட்டுகிறார். ஆலயச் சடங்கை விட அடிபட்டவனுக்கான உதவியே இறைவனின் சித்தம்.

3. தற்செயலான நிகழ்வுகள், இறைவன் நமக்கு தரும் வாய்ப்புகள். குருவும், லேவியனும் அந்த வழியே தற்செயலாக இறைவனால் அழைத்து வரப்பட்டனர். ஆனால் தங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை அவர்கள் தவற விட்டனர். எதேச்சையாய் நடக்கும் நிகழ்வுகளின் மூலமாய் இறைவன் நம்மிடம் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

4. அந்த சமாரியன் அடிபட்டவனை நெருங்குகிறான். உடனடித் தேவை என்ன என்பதை நிறைவேற்றுகிறான். அவனை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்கிறான். இந்த மூன்று நிலையிலான உதவிகளை நாம் பிறருக்குச் செய்யத் தயாராய் இருக்க வேண்டும்.

5. அந்த சமாரியன் தனது பயணத்தில் அசொகரியத்தை விரும்பி ஏற்றுக் கொண்டான். தன்னிடமிருந்த திராட்சை ரசம், மது, பணம் போன்றவற்றை இழக்க தயாரானான். தனது நேரத்தை இழக்க துணிந்தான். இந்த மூன்று நிலையிலான இழப்புகளை பிறருதவிப் பணிகளில் நாம் விரும்பி ஏற்க வேண்டும்.

6. இயேசு தனது விண்ணக மாண்பிலிருந்து இறங்கி, பாவத்தில் அடிபட்டுக் கிடந்த நம்மை மீட்டு, மீட்புக்குள் அழைத்துச் செல்லும் ஆன்மீகப் பாடம் இந்த சமாரியனின் செயல்களில் மிளிர்கிறது. அந்த நல்ல சமாரியனின் பாதையில் பயணம் செய்ய தயாராக வேண்டும்.


7. உதவிக்கரம் நீட்ட வந்தபோது சமாரியன் வேறு எதையும் யோசிக்கவில்லை. அடிபட்டுக் கிடந்தவனுடைய மதம் இனம் குலம் கோத்திரம் எதுவுமே அவனுடைய மனதில் எழவில்லை. தன்னைப் போல அவனும் ஒரு மனிதன் எனும் சிந்தனையே அவனிடம் இருந்தது. அதுவே மனிதநேயப் பணிகளின் முக்கியமான தேவை.

8. இயேசுவிடம் கேள்விகள் கேட்பது நல்லது. அந்த கேள்விகளின் நோக்கம் நமது ஆன்மீக வளர்ச்சிக்காக இருக்க வேண்டுமே தவிர வேறு எதற்காகவும் இருக்கக் கூடாது. தெளிவுகள் கிடைக்கும்போது அதை பின்பற்றும் மன உறுதியும் நமக்கு இருக்க வேண்டும்.

9. நிலைவாழ்வுக்குள் செல்ல வேண்டுமெனில் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதும், பிறரை மன்னிப்பது மட்டுமே போதாது. மனிதநேயப் பணிகளுக்காக நமது இதயத்தை விருப்பமுடன் திறந்து வைத்திருக்கவும் வேண்டும். பிறரை நிராகரித்துவிட்டு, நாம் விண்ணகம் செல்ல முடியாது.

10. எருசலேம் முதல் எரிகோ வரை என்பது நமது வாழ்க்கையின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பயணம் எனலாம். அதில் நாம் சந்திக்கும் நபர்கள் எக்கச்சக்கம். அவர்களுக்கு உதவும் மனம் நமக்கு வேண்டும். குறிப்பாக அடிபட்டுக் கிடந்தவனைப் போல, ‘‘வாய் திறந்து உதவி கேட்காத’’ நிலையில் இருப்பவர்களுக்கு அவர்களுடைய தேவையை அறிந்து உதவும் நிலை வேண்டும். உதவி என்பது ஆறுதல், பொருளாதாரம், நேரம், என எதுவாகவும் இருக்கலாம்.

# தேவ திட்டத்தைக் கெடுத்து விடாதீர்கள்



தேவன் இளம் தலைமுறையினரை மிகவும் நேசிக்கிறார். எனவேதான் தம்முடைய வார்த்தையின் மூலமாக அவர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறார். இதோ, உங்களுக்கான வார்த்தை:

1. பொழுதுபோக்குகளை தெரிவு செய்யும்பொழுது: ''பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விடுங்கள்'' (1 தெச 5:22).
2. தேவனுக்காக சாட்சியாக நின்றதால் கிண்டல், கேலிக்கு உட்படும்பொழுது: ''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரமாக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய்...'' (அப் 5:41)
3. பெற்றோரால் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும்பொழுது: ''பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்'' (எபே 6:1).
4. பரீட்சை எழுதும் வேளையில்: ''எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; நாங்கள் நல்மனசாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித்திருக்கிறோம்'' எபி 13:18).
5. மற்றவர்களைப் பற்றி பேசும்போது: ''ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டி'' (தீத்து 3:2).
6. நன்மை செய்து தூஷிக்கப்படும்பொழுது: ''நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்'' (1 பேது 2:20).
7. நண்பர்களைத் தெரிவு செய்யும்பொழுது: ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?'' (2 கொரி 6:14).
8. எதிர்காலத்திற்கான திட்டங்களை யோசிக்கும்பொழுது: ''உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்'' (சங் 119:133).

மிகவும் அற்புதமான, வெற்றிக்கு வழிவகுக்கும் உனக்கான திட்டம், தேவன் உனக்கான திட்டத்தைக் கொண்டுள்ளார்! உன் வாழ்க்கையில் இந்த அற்புதமான திட்டத்தை செயல்படுத்த தேவன் மிகுந்த ஆவலோடு காத்திருக்கிறார். நீ அவருடைய திட்டத்தை கெடுத்து விடாதே.


உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்.
சங்கீதம் 119:148
Elim GRC
ஏலிம்
முழு இரவு
ஜெபம்
14 ஜூலை
9.30pm - 1.30am
வெள்ளிக்கிழமை
Pastor
OSBORNE
Jebadurai
முடிவிலே வாகன வசதி உண்டு
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024
9884908777, 9003067777
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை


நீங்கள் உபவாசம் இருப்பதை உங்கள் பிதாவானவர் காண்பார் அவர் உங்களுக்கு வெகுமதியளிப்பார்
மத்தேயு 6:18
Elim GRC
ஏலிம்
மகிமையான எழுப்புதல்
தேவாலயம்
ஜூலை
22
9 AM - 2 PM
சனிக்கிழமை
பரிசுத்த
ஆசீர்வாத
உபவாச
ஜெபம்
மதிய ஆசீர்வாத
உணவு கொடுக்கப்படும்
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024
9884916777, 9003067777



அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும்
அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. அப்போஸ்தலர் 5:12
FRI 28
SAT 29
SUN 30
JULY
2023
திருப்பத்தூர்
வது
2
அற்புத
அடையாளங்கள்
முகாம்
SIGNS AND WONDERS CAMP
அனுமதி
மட்டும்
₹ 75
பாவமா
வியாதியா
கவலையா
கண்ணீரா
?
வாருங்கள்,
அற்புத விடுதலையைப்
பெற்றுக்கொள்ளுங்கள் !
PS. OSBORNE Jebadurai
BRO.VINCENT Selvakumar
BRO.T.STEPHEN
BRO. EBENEZER Paul
SCAN HERE
நேரம்
வெள்ளி காலை 6 மணி முதல்
ஞாயிறு மதியம் 1 மணி வரை
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம் திருப்பத்தூர் மாவட்டம், வேலூர் அருகில்
திருப்பத்தூர் மாவட்டம், 9884908777, 9003067777